**லுனுகம்வெஹெர பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றுமு உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திரட்டிய நிதியக் கணக்கு மீதி ரூபா 411,213 தொகை மிகையாக காட்டப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போதும் அவற்றை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | கணக்கு மீதிகள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபையினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 453,320 தொகை பெறுமதியான சொத்துக்கள் மூலதனப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | சொத்துக்கள் மூலதனப் படுத்தப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 550,990 இற்கான மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் மீண்டுவரும் செலவுகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் நடைபெறாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | குப்பை நிலையத்தின் நுழைவுப் பாதை துண்டுக் கற்கள் பதித்து தயாரிப்பதற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,499,418 இற்கான செலவு காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | மூலதனச் செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | கீர்த்திபுர விளையாட்டுத் திடலை சுற்றி வேலி மற்றும் படலை நிர்மாண வேலைக்காக செலவுகளை மூலதனப்படுத்தும் போது ரூபா 295,088 இற்கான மூலதனச் செலவுப் பகுதி மாத்திரம் மூலதனப்படுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 681,572 தொகைக்கான வருவாய்ச் செலவுப் பகுதியும் உட்படுத்தப்பட்டு மூலதனப்படுத்தப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | மூலதனச் செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 2,164,820 இற்கான சம்பள மீளளிப்புப் தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், 2020 ஆண்டிற்குரிய மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 1,000,000 இற்கான சம்பள மீளளிப்பு ஆண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | பெற வேண்டிய மீதிகள் மற்றும் வருமானங்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 11,849,765 தொகைக்கான 09 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் அதற்குரிய துணைப் பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 2,667,359 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | தாமதங்கள், தவிர்த்தல் மற்றும் கூட்டுதல் ஆகிய வழுக்கல் வித்தியாசத்திற்கான காரணமாக இருந்தது என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகள் சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான வைப்பொன்றின் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறுமதி ரூபா 635,224 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், நிலையான வைப்புக்குரிய வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்புச் சான்றிதழ் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலையான வைப்புச் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 126 | 30 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் சட்ட ஆக்கஞ் செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 திசெம்பர் 31 திகதி அளவிலும் 28 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் சட்ட ஆக்கஞ் செய்யப்பட்டிருந்தது. | சட்ட ஆக்கஞ் செய்யப்பட்டிருக்காத விடயங்களுக்காக எதிர்காலத்தில் துணை விதிகள் தயாரிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதியப் பிரமாணம் 177(1) | சபையில் கடமையாற்றும் வருமானப் பரிசோதகரினால் 2022 ஆண்டின் போது 21 சந்தர்ப்பங்களில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 58,900 இற்கான சந்தை வாடகை வருமானம் உரிய முறையில் அலுவலகத்திற்கு ஒப்படைக்காமல் வருமானம் சேகரிக்கப்பட்ட நாளில் இருந்து 01 நாள் மற்றும் 57 நாட்களுக்கு இடைப்பட்டிருந்த காலம் கையில் வைத்திருந்து அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டிருந்தது. | வருமானப் பரிசோதகருக்கு எச்சரிக்கை கடிதம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது எனவும், பணம் அனுப்புதல் பரிசோதனைக்கு உள்ளாக்கப்படும் எனவும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 910,950 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 1,098,417 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| வருமான மூலம் | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2021 மதிப்பீட்டு வருமானம் | 2021 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2021 சேகரிக்கப்பட்ட வருமானம | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 530,000 | 692,800 | 635,120 | 154,760 | 455,000 | 531,580 | 464,500 | 97,080 |
| வாடகை | 6,045,000 | 3,377,183 | 3,462,646 | 1,386,296 | 4,626,600 | 5,544,516 | 4,529,843 | 1,471,759 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,348,200 | 1,720,235 | 1,790,685 | 1,395,340 | 850,000 | 1,729,400 | 775,450 | 1,465,790 |
| ஏனைய வரு மானங்கள் | 2,110,000 | 1,682,430 | 1,170,193 | 628,608 | 150,000 | 33,310 | 22,440 | 116,371 |
| மொத்தம் | 10,033,200 | 7,472,648 | 7,058,644 | 3,565,004 | 6,081,600 | 7,838,806 | 5,792,233 | 3,151,000 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை அதிபார சட்டத்தின் பிரிவு 134(1) இணங்க சபையின் அதிகார பிரதேசத்தில் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை காலரீதியாக இனங்கண்டு வீதவரி அறவீடு செய்யவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த பின்னர் வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெறவேண்டிய வியாபார வரி ரூபா 154,760 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 152(1) இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 16 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய கடையறை வாடகை மற்றும் தண்டப்பணம் ரூபா 116,800 தொகை மற்றும் வாகன வாடகை ரூபா 482,950 தொகையினை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 159(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | வருமானம் அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 03 வாராந்த சந்தைகளிலிருந்து பெற வேண்டிய சந்தை வாடகை வருமானம் ரூபா 553,210 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை பாதுகாப்புப் பிணையில் இருந்து மற்றும் சட்ட நடவடிக்கைகளின் மூலம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | பேரலியஹெல குடா கம்மான 03 வாராந்த சந்தை உடன்படிக்கைக்கு இணக்கமின்றி மூன்றாம் தரப்பினருக்கு வாடகை உரிமையை விற்பனை செய்திருந்ததுடன், வாடகைக்கு பெற்றவரினால் வாடகை ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறியிருந்த போதிலும் சபை அது தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் வழக்குத் தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கையின் நிபந்தனைகளின் படி செயற்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 166,750 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 149 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 31 நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 1,228,590 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மாகாண சபை பிரதான செயலாளரிடம் இருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 378,654 தொகை மற்றும் ரூபா 2,260,547 தொகையாக இருந்தது. | நிலுவை நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் விரைவாக பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் நலனோம்பு விடயங்கள் என நீர் இலவசமாக மற்றும் கட்டணமொன்று அறவீடு செய்து சபையின் அதிகாரப் பிரதேசத்தில் வினியோகிக்கப்படுகின்றது. மீளாய்வாண்டு நீர் வினியோக இலாபம் ரூபா 118,646 தொகை எனினும், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்புச் சபையில் இருந்து நீர் கொள்வனவு செய்வதற்கு நீர் வினியோகம் மற்றும் எரிபொருள் செலவு என மேற்கொண்டிருந்த மொத்த செலவுகள் ரூபா 1,794,449 தொகையாக காணப்பட்டமையால் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 1,675,803 | எதிர் காலத்தில் நலனோம்பு விடயங்கள் என கணித்து மரணச் சடங்குகளுக்கு மாத்திரம் இலவசமாக நீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | கிரயத்தினை ஈடு செய்யக்கூடிய விதமாக விலையொன்று அறவீடு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

தொகையாக காணப்பட்டதுடன், வருமானத்தை நேரொப்ப மொத்தச் செலவுகள் 15 மடங்காக அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்தி சிறுவர்களுக்காக பாடசாலை உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 279,750 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் சிறுவர்களுக்கு வினியோகித்தல் மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், ரூபா 19,980 தொகை வீதம் 14 புத்தகத் தொகுதிகள் தயாரிக்கப்பட்டு 14 சபை அங்கத்தவர்களுக்கு 2022 திசெம்பர் 14 திகதி வழங்கப்பட்டிருந்தது. அங்கத்தவர்களினால் அந்தப் புத்தகங்கள் சிறுவர்களுக்கு வினியோகிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் பெயர் அட்டவணை கணக்காய்வுத் திகதியாகிய 2023 மார்ச் 16 திகதி அளவிலும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | இவ்வாறான தாமதங்கள் எதிர்காலத்தில் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | புத்தகங்கள் வினியோகிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்குச் சொந்தமான 61 காணிகளின், 30 மயானங்களின், 38 சனசமூக நிலையங்களின் மற்றும் 03 வாகனங்களின் சட்டரீதியான உரிமையினை சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் வாகனங்களின் உரிமையை உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சொத்துக்களின் சட்டரீதியான உரிமை உரித்தாக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்குச் சொந்தமான 03 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் 2018 மற்றும் 2019 ஆண்டுகள் முதல் செயற்படாது காணப்பட்டதுடன், அவற்றை திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அப்புறப்படுத்தும் சபையொன்று நியமனம் செய்து இந்த வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயற்படாத சொத்துக்களை திருத்த வேலைகள் மேற்கொள்ளல் அல்லது அப்புறப்படுத்தல் மேற்கொள்ள வேண்டும். |

## 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.6.1 இற்கு இணக்கமின்றி கூட்டுப் பெறுமதி ரூபா 986,350 தொகைக்கான முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் 06 அலகுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும், பிரிவு 2.8.4 இன் படி இந்த கொள்வனவுகள் உரிய நியமத்தில் காணப்பட்டவா என இனங்காண்பதற்கு தொழில்நுட்ப மதிப்பாய்வு குழுவொன்று நியமனம் செய்து அறிக்கையொன்று பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியாக செயற்படுவதற்கு விடய உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டது என. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெரலிஹெல சந்தையை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக ரூபா 4,450,776 இற்கான கொடுப்பனவு அறிக்கை தயாரிக்கப்பட்டு ரூபா 445,077 தொகை தடுத்து வைத்தல் பணம் கழித்து ரூபா 4,005,699 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், நிர்மாண வேலையை செயற்படுத்தும் போது மேற்கொள்ளப்பட்டிருக்காத வேலைக்காக ரூபா 318,952 தொகை மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | ரூபா 127,570 தொகை ஒப்பந்த சங்கத்திற்கு தடுத்து வைத்தல் பணம் செலுத்தும் போது அறவீடு செய்யப்படும் எனவும், மீதித் தொகை தொடர்பாக பிரயோகிக்கப்பட்ட விலை ரேட்கள் சரியானது என. | மிகையாக செலுத்தப்பட்ட கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிர்மாண வேலைகள் பரிசோதித்தல் - 2021 தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த 2022 மார்ச் 25 திகதிய HMB/B/LPS/B4/2021/AQ/07 இலக்கம் கொண்ட கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டியிருந்த 04 நிர்மாண வேலைகள் தொடர்பான ரூபா 482,217 தொகை அறவீடு செய்தல் மற்றும் அவை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுப்பதற்கு நிதிப் பிரமாணம் 155 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிர்மாண வேலைகளுக்கான இயந்திரங்களுடன் மனித உழைப்பு பயன்படுத்தல் பிரயோகிக்கப்பட்ட விலை ரேட்கள் சரியானவை என. | மிகையாக செலுத்தப்பட்ட கொடுப்பனவு அறவீடு செய்யப்பட வேண்டும். |